



புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351







## புழக்கத்தில் உள்ள 2000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்படும்

# RBI அறிவிப்பு

## கையில் உள்ள 2000 ரூபாய் நோட்டுகளை நாள் ஒன்றுக்கு 20 ஆயிரம் வீதம் செவ்வாய்க்கிழமை முதல் செப்டம்பர் 30ஆம் தேதி வரையில் மாற்றிக் கொள்ளலாம்

புதுடெல்லி, மே. 20-

2000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்படுவதாகவும், அவற்றை வங்கிகளில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இதற்கான கடைசி நாள் செப்டம்பர் 30 ஆகும். இது தொடர்பாக ரிசர்வ் வங்கி நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள அறிவிப்பு விவரம் வருமாறு: “2000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெற ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. எனவே, ரூ.2,000 நோட்டுகளை வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு இனி விநியோகிக்கக் கூடாது. இந்த நடைமுறை உடனடியாக அமலுக்கு வருகிறது. பொதுமக்கள் தங்களிடம் இருக்கும் 2,000 ரூபாய் நோட்டுகளை இம்மாதம் 23-ம் தேதி முதல் (செவ்வாய்கிழமை) வங்கிகளில் கொடுத்து கணக்கில் வரவு வைத்துக்கொள்ளலாம் அல்லது வேறு ரூபாய் நோட்டுகளாக மாற்றிக் கொள்ளலாம். ஒரு நேரத்தில் அதிகபட்சம் 20,000 ரூபாய் வரை வங்கிகளில் இவ்வாறு வரவு வைக்க முடியும் அல்லது மாற்ற முடியும்.

எந்த ஒரு வங்கிக் கிளையிலும் பணத்தை மாற்றிக்கொள்ள முடியும். இதற்கான வாய்ப்பு வரும் செப்டம்பர் 30-ம் தேதி வரை அமலில் இருக்கும். 2,000 ரூபாய் நோட்டுக்கள் பணமதிப்பிழப்பு செய்யப்படவில்லை. அதே நேரத்தில், அவை திரும்பப் பெறப்படுகின்றன. வங்கிகளில் வரவு வைப்பது என்பது வழக்கமாக வரவு வைப்பது போன்றதே. இதில் கட்டுப்பாடுகள் கிடையாது" என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

கருப்புப் பணப் புழக்கத்தை மேலும் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 2,000 ரூபாய் நோட்டு புழக்கத்தை ஏற்கெனவே ரிசர்வ் வங்கி கட்டுப்படுத்தத் தொடங்கியது. இதனால், சந்தையில் அவற்றின் புழக்கம் பெருமளவில் குறைந்துவிட்டது. கடந்த 2018-ம் ஆண்டு மார்ச் 31ம் தேதி 2,000 ரூபாய் நோட்டுகளின் புழக்கம் 6.73 லட்சம் கோடியாக இருந்தது. இது 2023, மார்ச் 31ம் தேதி 3.62 லட்சம் கோடியாக குறைந்துள்ளது. புழக்கத்தில் உள்ள 2,000 ரூபாய் நோட்டுகளின் மதிப்பில் இது 10.80 சதவீதமாகும். இந்தத் தொகையில் பெரும்பகுதி கருப்புப் பணமாக இருக்க வாய்ப்புள்ளதாலேயே அவை வங்கிக்கு வரவில்லை என கருதப்படுகிறது. எனவே, அவற்றை வங்கிக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது.

கடந்த 2016-ம் ஆண்டு எடுக்கப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கையை அடுத்து 2,000 ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.



### கருப்பு பணத்தை மீட்கவா? தேர்தல் யுக்தியா?

கடந்த சில மாதங்களாகவே சாமானியர்களால் பேசப்பட்டு வந்ததை தான். ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. இதில் அதிர்ச்சி அடையும் அளவுக்கு ஒன்றும் இல்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஒரு வருடத்திற்கும் குறைவாகவே நாட்கள் இருக்கும் சூழலில் வந்திருக்கும் இந்த அறிவிப்பு சில அரசியல் கட்சிகளுக்கு பீதியை ஏற்படுத்தி இருப்பதை உணர முடிகிறது. ஒட்டுமொத்த இந்தியாவுக்கான அறிவிப்பாக இது இருந்தாலும் தமிழக நிதி அமைச்சராக இருந்த பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் பேசியதாக வெளியான ஆடியோவையும் இங்கு உற்று நோக்க தான் தோன்றுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு கமிட்டித் தலைவர் ரகுபதி, பாலமேடு மடத்து கமிட்டி ஜல்லிக்கட்டு தலைவர் பிரபூ, எம்.ஆர்.எம். பாலசுப்ரமணியம், ஜல்லிக்கட்டு பேரவை மாநிலத் தலைவர் பீட ராஜசேகர், வாடிப்பட்டி ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு கழகத் தலைவர் பிரபுபால் பாண்டி, அவனியாபுரம் ஜல்லிக்கட்டு விழாக் குழுவினர் கண்ணன், அழகாபுரி புதுப்பட்டி ஜல்லிக்கட்டு விழாக் குழு தலைவர் பரந்தாமன், மதுரை மேலூர் தாலுகா சருகுவலையப்பட்டி கிராம விழாக் குழு நிர்வாகிகள் மற்றும் சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, திருப்பூர் மாவட்ட ஜல்லிக்கட்டு பேரவைகளின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழர்தம் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தத் தடையில்லை என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பினை சட்டப் போராட்டம் நடத்தி பெற்று தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், பி.மூர்த்தி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மதுரை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மணிமாறன் ஆகியோர் உள்ளனர்.

## ஐ.பி.எஸ் மற்றும் காவல் உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை , மே. 20-

ஐ.பி.எஸ்மற்றும்காவல் உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

ஆவடி மாநகர காவல் ஆணையராக அருண், திருப்பத்தூர் எஸ்.பி.யாக ஆல்பர்ட் ஜான் நியமனம் செய்யப்பட்டுள்ளார். நாகை எஸ்.பி.யாக ஹர்ஷ் சிங், ஈரோடு எஸ்.பி.யாக ஜவஹர், நாமக்கல் எஸ்.பி.யாக ராஜேஷ் கண்ணன், வேலூர் எஸ்.பி.யாக மணிவண்ணன் நியமனம் செங்கல்பட்டு எஸ்.பி.யாக சாய் பிரநீத், திருப்பூர் எஸ்.பி.யாக சாமிநாதன், விழுப்புரம் எஸ்.பி.யாக சஷாங்க் சாய் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், ஐபிஎஸ் அதிகாரி ராஜீவ் குமாருக்கு டிஜிபியாக பதவி உயர்வும், ஆவடி காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோருக்கு காவல் பயிற்சி அகாடமி டிஜிபியாக பதவி உயர்வும், ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை டிஜிபியாக அபய் குமார் சிங்-க்கு பதவி உயர்வும் அளிக்கப்பட்டுள்ளது.






# இன்று

20-5-23


சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் தோற்றம்

செவ்வாழை பழம் சாப்பிடுவது பல்லுக்கு நல்லது.
சக வருடம் 1945 வைசாகம் 30.

| சோபகிருது வைகாசி 6 | MAY - SAT சனி | ஷவ்வால் 29 வளர்பிறை 140 / 225 | இராசிபலன் |
|---|---|---|---|
| பிரதமை 40.03 (மா.09.54) கார்த்திகை 06.26 (கா.08.27) தியாஜ் 48.14 அகஸ் 31.15 அமிர்த. புன்னாக கௌரி விரதம். மன்னார்குடி ராஜகோபாலசுவாமி புறப்பாடு. திருநள்ளாறு சனி பகவான் சிறப்பு அபிஷேகம். இஷ்டி காலம். வைத்தீஸ்வரன் கோவில் செல்வமுத்துக்குமாரசுவாமி புறப்பாடு கண்டருளல். | | | மேஷம் - பாராட்டு, ரிஷபம் - சலனம், மிதுனம் - உற்சாகம், கடகம் - நற்செய்தி, சிம்மம் - குழப்பம், கன்னி - ஆர்வம், துலாம் - முயற்சி, விருச்சி - எதிர்ப்பு, தனுசு - பெருமை, மகரம் - சாதனை, கும்பம் - பொறுமை, மீனம் - நிறைவு |

| | நல்லநேரம் | கௌரி.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.30-5.30 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர். ரிஷப லக்கனம் இருப்பு நா. 4 வி. 00. சந்திராஷ்டமம் சித்திரை. கரணம் : 12-1.30 சூரிய உதயம் : 5.53
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

உன்னை வீழ்த்தும் அளவிற்கு
விதிகள் எழுதப்பட்டிருந்தால்,
விதிகளை வீழ்த்தும் அளவிற்கு
வழிகளும் நிறுவப்பட்டிருக்கும்!
தளறாதே!
துணிந்து செல்!






## "போலியான ஆவணங்கள் மூலம் பாஸ்போர்ட் வாங்காதீங்க" கமிஷனர் சங்கர் ஜிவால் எச்சரிக்கை



சென்னை , மே.20-
சென்னை காவல் துறையில் மத்திய குற்றப்பிரிவின் கீழ் இயங்கி வரும் போலி கடவுச்சீட்டுக்கள் (Passports) புலனாய்வு பிரிவானது கடவுச்சீட்டு மோசடி தொடர்பாக குற்றம் செய்யும் நபர்களின் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சென்னை காவல் ஆணையர் சங்கர் ஜிவால், எச்சரிக்கை விடுத்துள்ளார்.
சென்னை காவல் துறையில் மத்திய குற்றப்பிரிவின் கீழ் இயங்கி வரும் போலி கடவுச்சீட்டுக்கள் (Passports) புலனாய்வு பிரிவானது கடவுச்சீட்டு மோசடி தொடர்பாக குற்றம் செய்யும் நபர்களின் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றது. இவ்வழக்கு தொடர்பான புகார்கள் மண்டல கடவுச்சீட்டு (RPO) அலுவலரிடம் இருந்தும், மண்டல வெளிநாட்டினர் பதிவாளரிடம் இருந்தும் பெறப்படுகின்றன. (FRRO) கடந்த 2008-ம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் பதிவு செய்யப்பட்ட 236 வழக்குகள் நிலுவையில் இருந்து வந்தது.
இதில் 95 இந்திய நாட்டினரும், பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 59 நபர்களும் இலங்கையை சேர்ந்த 65 நபர்களும், மற்ற வெளிநாடுகளைச் சேர்ந்த 8 நபர்களும் இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்தனர். இதில் தொடர்புடைய வெளிநாட்டு குற்றவாளிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, திருச்சியில் உள்ள வெளிநாட்டவர்க்கான சிறப்பு முகாம்களில் வைக்கப்படு உள்ளனர்.வழக்கு முடியாமல் இருப்பதால் வெளி நாட்டவரை அவர்களது நாட்டிற்கு திருப்பி அனுப்புவதிலும், முகாம்களில் வைத்திருப்பதிலும், சில சிக்கல்கள் உள்ளன. வெளி நாட்டின் முகாமில் இருந்து தப்பிச்செல்லும் நிகழ்வுகளும், ஏற்படுகிறது.
காவல்துறை உயர் அதிகாரிகள் உத்தரவின் பேரில் வழக்கு முடிக்கப்பட்டு விரைவில் அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் போலியாக ஆவணங்களை கண்டறிந்து ரத்து செய்து வருகின்றனர். இந்த குற்றத்தோடு தொடர்புடைய குற்றவாளிகளின் கடவுச்சீட்டுகளை சரி பார்த்த காவலர்களின் (PVR) மீது நடவடிக்கை எடுக்கும்படி, சம்பந்தப்பட்ட மாவட்ட காவல் கண்காணிப் பாளர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. போலி ஆவணம் மூலம் கடவுச்சீட்டைப் பெற உதவிய ஏஜெண்ட் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல் துறை தெரிவித்துள்ளனர்.

### உச்சநீதிமன்ற நீதிபதிகளாக
## பிரசாந்த் குமார் மிஷ்ரா, விஸ்வநாதன் பதவியேற்றனர்



புதுடெல்லி , மே.20-
உச்சநீதிமன்ற நீதிபதிகளாக பிரசாந்த் குமார் மிஷ்ரா, விஸ்வநாதன் ஆகியோர் நேற்று பதவியேற்றனர்.
உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நீதிபதி பிரசாந்த் குமார் மிஷ்ராவையும், மூத்த வழக்கறிஞர் விஸ்வநாதனையும் நியமிக்குமாறு கொலிஜியம் பரிந்துரைத்தது. இந்த பரிந்துரையை மத்திய சட்ட அமைச்சகம் ஏற்றதை அடுத்து, இருவரும் நேற்று உச்சநீதிமன்ற நீதிபதிகளாக பதவி ஏற்றுக்கொண்டனர். தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், இருவருக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
நீதிபதி மிஸ்ரா மற்றும் நீதிபதி விஸ்வநாதன் ஆகியோர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் செய்வதற்கான உத்தரவை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கடந்த வியாழக்கிழமை பிறப்பித்தார். இதையடுத்து, இவர்களின் நியமனம் குறித்த உத்தரவை புதிய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் ட்விட்டரில் அறிவித்தார். இதன் தொடர்ச்சியாக இருவரும் இன்று பதவியேற்றுக் கொண்டனர். இதன்மூலம், அனுமதிக்கப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையான 34 நீதிபதிகளின் பணியிடங்கள் நிரம்பி உள்ளன.
அதேநேரத்தில், உச்சநீதிமன்ற நீதிபதிகள் கே.எம். ஜோசப், அஜய் ரஸ்தோகி மற்றும் வி. ராமசுப்ரமணியன் ஆகியோர் அடுத்த மாதம் பணிஓய்வு பெற இருக்கிறார்கள். வரும் வெள்ளிக்கிழமைதான் அவர்களின் கடைசி பணி நாளாக இருக்கும்.
நேற்று உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றுள்ள விஸ்வநாதன், வரும் 2030ம் ஆண்டில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக பதவியேற்கும் வாய்ப்பைப் பெற உள்ளார். இவருக்கு முன் தலைமை நீதிபதியாக ஜே.பி. பர்திவாலா உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக பதவி வகிப்பார். அவரது ஓய்வை அடுத்து 2030ம் ஆண்டு ஆகஸ்ட் 11ம் தேதி விஸ்வநாதன் தலைமை நீதிபதியாக பதவியேற்பார்.






## கும்பகோணம் அருகே அரசு பேருந்தின் கண்ணாடியை உடைத்தவர் கைது



தஞ்சை , மே.20-
கும்பகோணம் வட்டம், முத்துப்பிள்ளை மண்டபத்தில் அரசு பேருந்து பின்புறம் கண்ணாடியை உடைத்தவரை போலீசார் கைது செய்தனர்.
காரைக்காலிருந்து கும்பகோணத்தை நோக்கி அரசு பேருந்து ஒன்று வந்தது. இதில் சுப்பிரமணியன் ஒட்டுநராகவும், நடத்துனராக இளமாறன் (55) என்பவரும் பணியில் இருந்தனர். இப்பேருந்தில் அம்பரத்தூர் பேருந்து நிறுத்தத்தில் இருந்து சுரேஷ் (45 ) என்ற பயணி ஏறியுள்ளார். மேலும் அவர் டிக்கெட் வாங்காமல் பயணித்ததாக கூறப்படுகிறது. இதனையறிந்த, பேருந்தின் நடத்துநர் இளமாறன், முத்துபிள்ளை மண்டபம் பகுதியில் சுரேஷை கீழே இறக்கி விட்டுள்ளர். இதனால் ஆத்திரமடைந்த சுரேஷ், கற்களை வீசி, பேருந்தின் பின்புறம் கண்ணாடியை உடைத்துள்ளார்.
இதனிடையே, பேருந்து நடத்துநர் இளமாறன் அளித்த புகாரின் அடிப்படையில், நாச்சியார்கோயில் காவல் நிலைய போலீஸார் கும்பகோணம், மாதுளம்பேட்டைத் தெருவைச் சேர்ந்த சுரேஷை, கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொறியியல் கலந்தாய்வு ஜூலை 2-ம் தேதி தொடங்கும் அமைச்சர் பொன்முடி தகவல்



*சென்னை , மே.20-*
*பொறியியல் கலந்தாய்வு ஜூலை 2ம் தேதி தொடங்கும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.*
*பொறியியல் சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு மே 5-ம் தேதி தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாணவ, மாணவிகள் போட்டி போட்டு விண்ணப்பித்து வருகின்றனர். 17-ம் தேதி மாலை 6 மணி நிலவரப்படி ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 339 பேர் விண்ணப்பத்தை பதிவுசெய்துள்ளனர்.*
*அவர்களில் 90,471 பேர் பதிவுக் கட்டணத்தை செலுத்தியுள்ளனர். 50,686 பேர் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்துள்ளதாக தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை செயலாளர் புருஷோத்தமன் தெரிவித்துள்ளார்.*
*பொறியியல் படிப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க ஜூன் 4-ம் தேதி கடைசி நாள் ஆகும். இந்நிலையில், பொறியியல் கல்லூரி கலந்தாய்வு வரும் ஜூலை 2-ம் தேதி தொடங்க உள்ளது. ஆகஸ்ட் 2-ம் தேதி கலந்தாய்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு மாதம் முன்னதாகவே நடைபெற உள்ளதாக உயர்க்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.*

## அரியலூரில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கூட்டம்




அரியலூர், மே.20-
அரியலூரில் தமிழர் வாழ்வுரிமைக் கட்சி சார்பில் நடைபெற்ற, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கூட்டத்தில், கட்சித் தலைவர் பண்ருட்டி வேல்முருகன் பங்கேற்று பேசினார். தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில், அரியலூர் காமராஜர் திடலில் நடைபெற்ற, 14 வது ஆண்டு முள்ளிவாய்க்கால் நிறைவேந்தல் பொதுக்கூட்டத்துக்கு, அக்கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளர் வே.சாமிநாதன் தலைமை வகித்தார். சிறப்புரையாற்றிய தமிழர் வாழ்வுரிமைக் கட்சியின் மாநில தலைவரும், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன் பேசியதாவது:
இலங்கை புத்த தேசம் என்றும், இந்தியா சமாதான பூமி என்றும் கூறுவார்கள். ஆனால் அன்றைக்கு இரண்டு தேசத்திலும் இருந்த ஆட்சியாளர்களின் ஆதரவுடன், ஒரே நாளில் ஒன்றரை லட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். வீரம் செறிந்த அந்த விடுதலைப் போராட்டத்தில், பெண்கள், கர்ப்பிணிகள் உள்ளிட்ட பலரும், சிங்கள ராணுவத்தினரால் மிகக் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்கள், வேதனை நிறைந்த அந்த வலிகளை, இளைய சமுதாயத்திற்கு தெரிவிக்க வேண்டியது, தமிழக வாழ்வுரிமை கட்சியின் கடமை. இலங்கையை பொறுத்த வரையில், தமிழர்களுக்கு கல்வி உரிமை, நில உரிமை, அதிகார உரிமை என்பது முற்றிலும் கிடையாது. அங்கு தமிழர்களாக இருந்தால், மருத்துவம் படிக்க 90 சதவீதம் மதிப்பெண் பெற்று இருக்க வேண்டும். அதுவே சிங்களவனாக இருந்தால், 35 சதவீதம் மதிப்பெண் பெற்றிருந்தால் போதும். அன்றைய காலகட்டத்தில், வேலுபிள்ளை பிரபாகரன் மட்டுமே, இலங்கை தேசத்தில் வாழும் தமிழர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தார். ஆனால் அங்கு நடத்தப்பட்ட தமிழின அழிப்புக்கு, உலக அளவிலான 30க்கும் மேற்பட்ட வல்லரசுகள் துணை போயின. அன்றைய காலகட்டத்தில், இலங்கையில் இருந்த செஞ்சிலுவை சங்கம், ஐநா மனித உரிமை ஆணையம், சர்வதேச பத்திரிகையாளர்கள், உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் வெளியேற்றப்பட்டனர்.
ஈழத்தில் ஒன்றரை லட்சம் அப்பாவி தமிழ் மக்கள் செத்து ஒழிய காரணமான, சிங்கள பேரினவாத சமூகத்துக்கு, என்றைக்காவது ஒரு நாள், தமிழ் இனம் மரண அடி கொடுக்கும் என்கிற நம்பிக்கை நமக்குள்ளது, இதற்காக ஐநா சபை சார்பில், பொது வாக்கெடுப்பு மற்றும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது நமது கோரிக்கை, இவ்வாறு தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பண்ருட்டி வேல்முருகன் பேசினார்.
மேடையின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு சின்னத்துக்கு, வேல்முருகன் உட்பட, தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிர்வாகிகள் பலரும், மலர் அஞ்சலி செலுத்தினர்,தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநில, மாவட்ட, வட்டார நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இக்கூட்டத்தின் முடிவில், கட்சி நிர்வாகி ராஜா நன்றி கூறினார்.



► காரைக்காலில் இயங்கும் கெம்ப்லாஸ்ட் சன்மார் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதியின் மூலம் பிரதான் மந்திரி டி.பி. முக்த் பாரத் அபியான் என்ற மத்திய அரசின் திட்டத்தின் மூலம் சிகிச்சை பெறும் காச நோயாளிகளின் எதிர்கால சத்தான உணவிற்காகவும் மற்றும் அவர்களின் நலனிற்க்காகவும் இரண்டு இலட்சத்திற்கான காசோலையை மாவட்ட நிர்வாகத்திற்கு, மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கனிடம் அந்த நிறுவனத்தின் மூத்த துணை தலைவர் மதிவாணன் மற்றும் கர்ணல் ஜோதிசங்கர், துணைத் தலைவர் ஆகியோர் வழங்கினார்கள்.

## புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை மே 28-ல் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்



புதுடெல்லி , மே.20-
ரூ.970 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற கட்டிடம் மே 28 ஆம் தேதி திறக்கப்படுகிறது. பிரதமர் நரேந்திர மோடி இதனை திறந்துவைக்கிறார். டாடா புராஜக்ட்ஸ் நிறுவனம் புதிய நாடாளுமன்றத்தை கட்டியுள்ளது. இதற்கான வடிவமைப்பு அகமதாபாத்தின் ஹெச்சிபி டிசைன் வழங்கியது.
தற்போதுள்ள நாடாளுமன்ற கட்டிடம், 100 ஆண்டுகள் பழமையானது. எனவே, அதற்கு பதிலாக சென்டிரல் விஸ்டா என்ற பெயரில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு மத்தியஅரசு முடிவு செய்தது.
இதற்காக கடந்த 2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். ராஜபாதை (கடமைப்பாதை) சீரமைப்பு, பொதுவான மத்திய செயலகம், பிரதமருக்கான புதிய இல்லம் மற்றும் அலுவலகம், துணை குடியரசுத் தலைவருக்கான புதிய மாளிகை ஆகிய புதிய கட்டுமானங்களின் ஓர் அங்கமாக நாடாளுமன்றம் கட்டப்பட்டுள்ளது.
இந்திய ஜனநாயக பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் பிரம்மாண்ட அரசியல் சாசன அரங்கும் அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர கேன்டீன், வாகன பார்க்கிங் வசதிகளும் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளன.
புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் மக்களவையில் 888 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. பழைய கட்டிடத்தில் மக்களவையில் 543 இருக்கைகளே உள்ள நிலையில் புதிய கட்டிடத்தில் இருக்கைகள் எண்ணிக்கை அதிகமாக உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல் மாநிலங்களவையிலும் 250க்குப் பதிலாக 300 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற கூட்டுக் கூட்டங்கள் மக்களவையில் தான் நடக்கும் என்பதால் அங்கே மொத்தமாக 1,280 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.
பிரதமர் நரேந்திர மோடி 9 ஆண்டுகளுக்கு முன் கடந்த 2014-ம் ஆண்டு மே 26-ம் தேதி பிரதமராக பதவியேற்றார். அதிலிருந்து 2 நாட்கள் கழித்து புதிய நாடாளுமன்ற கட்டிடம் திறக்கப்படவுள்ளது.
புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை திறந்துவைக்குமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அழைப்புவிடுத்தார். இதனை மக்களவை செயலகம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.
இதனால் அடுத்துவரும் மழைக்கால கூட்டத்தொடர் புதிய நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறும். வரும் 2024 மே மாதம் மக்களவை தேர்தல் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
பழைய நாடாளுமன்ற கட்டிடம் பாரம்பரிய சின்னமாக பராமரிக்கப்படும்.என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்காசியில் மகளிர் குழுவில் மோசடி செய்த பணத்தை மீட்டு கொடுத்த காவல் கண்காணிப்பாளர்



தென்காசி
தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி பகுதியில் 19 பெண்கள் இணைந்து நடத்தும் ஸ்டார் மகளிர் குழுவில் கடந்த 2012 முதல் 2018 வரை மாதம் 100, 200, ரூபாய் வீதம் சிறுக சிறுக சேமித்து வந்த நிலையில் அக்குழுவின் தலைவியிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு 2018 முதல் சேமிப்பு நிறுத்தப்பட்டது.
இந்நிலையில் மேற்படி குழுத்தலைவி மீதமுள்ள பணத்தை தங்களுக்கு தராமல் மோசடி செய்ததாக பாதிக்கப்பட்ட பெண்கள் கடந்த ஏப்ரல் மாதம் 1-ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.எம். சாம்சன்னிடம் கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அன்னலட்சுமி அறிவுறுத்தலின் பேரில், சார்பு ஆய்வாளர் உமா மகேஸ்வரி விசாரணை செய்து ஸ்டார் மகளிர் குழுவின் சேமிப்பு பணம் 2 லட்சத்து 56 ஆயிரம் ரூபாயை மீட்டு மாவட்ட காவல் கண்காணிப் பாளரின் முன்னிலையில் உரிய நபர்களிடம் பணம் ஒப்படைக்கப்பட்டது.
பணத்தை மீட்டுக் கொடுத்த மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையினருக்கு பணத்தைப் பெற்றுக் கொண்ட ஸ்டார் பெண்கள் குழு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டனர்.



► சென்னை திருவொற்றியூர் பகுதியில் பூர்விகா அப்ளையன்ஸ் கடை திறப்பு விழா உரிமையாளர் யுவராஜ் தலைமையில், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.சங்கர், 4 வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மேனேஜர் மணிகண்டன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



► மதுரை பழங்காநத்தத்தில் எ.பி.ஆர்.ஜெயம் திரையரங்கு புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டுள்ளது. இந்த திரையரங்கை அஸ்வின், ராம்குமார் அபிஷேக் ரமேஷ் ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். மேலும் இதில் கார்த்திக், வெங்கடேஷ், மக்கள் நீதி மய்யம் சொக்கர், ஊரணி மணி, முத்துராமன், கோபி மற்றும் திரையரங்கு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## மேல முத்துடையான்பட்டியில் பயணியர் நிழற்குடை எம்.சின்னதுரை எம்எல்ஏ திறந்து வைத்தார்




*புதுக்கோட்டை, மே.20-*
*கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மேலமுத்துடையான் பட்டியில் பயணியர் நிழற்குடையை நேற்று சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை திறந்து வைத்தார்.*
*புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம் வெள்ளனூர் ஊராட்சிக்கு உட்பட்டது மேலமுத்துடையான் பட்டி கிராமம், இங்கு கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் புதிய பயணியர் நிழற்குடை கட்டப்பட்டது, பணிகள் முடிக்கப்பட்ட நிழற்குடையை கந்தர்வகோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை நேற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.*
*இந்நிகழ்வில் அன்னவாசல் திமுக ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி, பாரிவள்ளல், சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் கே.சண்முகம், மாவட்ட குழு உறுப்பினர் டி.சலோமி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் எம். ஜோஸப், கே.தேவராஜன், ரகுபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

# அறிஞர் அண்ணா அரசு கலை, அறிவியல் கல்லூரி ஆண்டு விழா




காரைக்கால், மே, 20 –
காரைக்காலில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 54-வது ஆண்டு விழா மற்றும் கலைஞர் மு.கருணாநிதி பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 3-வது ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

துறைத் தலைவர் ஆர்.ரெங்கையன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் ஆசாத் ராசா ஆண்டறிக்கை வாசித்தார். ஆண்டுவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கலந்து கொண்டு கல்லூரியில் ஒவ்வொரு துறையிலும் முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சியடைந்த மாணவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

மாவட்ட ஆட்சியர் பேசுகையில், காரைக்காலில் உள்ள அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அனைத்து கல்லூரிக்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் செய்து தருவதாகவும் விழாவில் பேசினார். மேலும் உங்கள் எதிர்காலத்தை நோக்கி நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கும் தருணத்தில் உள்ளீர்கள், நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும் அதன் பலன் எதிர்காலத்தில் நல்ல நிலையை அடையலாம் எனவும் ஆட்சியர் பேசினார்.

அதனை தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்வின் நிறைவாக தாவரவியல் துறைத்தலைவர் கதிர்வேலு சம்பந்தன் நன்றியுரை வழங்கினார். ஆண்டுவிழா ஏற்பாடுகளை கல்லுரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



காரைக்கால் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆட்சியர் வளாகத்தில் துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வன்முறை எதிர்ப்பு நாள் உறுதிமொழியை எடுத்து கொண்டார்கள். இந்திய மக்களாகிய நாம், நம் நாட்டு மரபுகளான அகிம்சை, சகிப்புத்தன்மை ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பதால், எல்லா வகையான அச்சுறுத்தல் கொள்கையையும், வன்முறையையும் நமது வலிமையுடன் எதிர்க்க, இதன் மூலம் விழுமிய முறையில் உறுதி செய்கிறோம். எல்லா மக்களிடையேயும் அமைதி, சமூக நல்லிணக்கம், ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றைப் போற்றி ஒழுகி மேம்படுத்தவும், மனித உயிர்களையும் மதிப்பீடுகளையும் அச்சுறுத்துகின்ற பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக போரிடவும் நாம் உறுதி எடுத்துக்கொள்கிறோம் என அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

# ரூ.20 கோடி மதிப்பில் மருத்துவ கட்டிடங்கள் கட்ட தொடக்க விழா



சீர்காழி, மே, 20 –
சீர்காழி பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவக் கட்டடம் கட்டுவதற்கான தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு பன்னீர்செல்வம் எம்எல்ஏ தலைமை தாங்கினார்.

நகரமன்ற தலைவர் துர்கா ராஜசேகரன், துணை தலைவர் சுப்பராயன், பொதுப்பணித்துறை உதவிசெயற்பொறியாளர் கார்த்திகேயன், உதவி பொறியாளர் ஜாண்டி ரோஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசு தலைமை மருத்துவர் அருண் ராஜ்குமார் வரவேற்று பேசினார்.

விழாவில் பன்னீர் செல்வம் எம்எல்ஏ புதிய கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜையை தொடங்கி வைத்து பேசுகையில் சீர்காழி மக்களின் வேண்டுகோளை ஏற்று ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் 47,259 சதுர அடியில் மூன்று அடுக்கு மருத்துவமனை கட்டடம் கட்டப்பட உள்ளது.

இதில் 50 படுக்கை அறைகள் மற்றும் அதிதீவிர சிகிச்சை மையம் அமைய உள்ளது. மேலும் மருத்துவ அதிகாரி அறை, அல்ட்ரா சவுண்ட் எக்ஸ்ரே அறை, விபத்து ஊசி போடும் அறை, சிவப்பு மண்டலம் மற்றும் மஞ்சள் மண்டலம் அறைகள், கழிப்பறைகள், விஷம் மற்றும் மருத்துவ ஐசியு ஆண் மற்றும் பெண் 12 படுக்கை அறைகள் அமையவுள்ளன.

இது தவிர இருதய தீவிர சிகிச்சை அறைகள், நியூரோ ஐசியூ அறைகளும் அமைய உள்ளது. இது இந்தப் பகுதி மக்களுக்கு எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

இந்த விழாவில் மருத்துவர் மதிவாணன், திமுக ஒன்றிய செயலாளர் பிரபாகரன், நகர மன்ற உறுப்பினர்கள் பாஸ்கரன், ராமு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வடமதுரை ஊராட்சியில் சின்ன ரெட்டி குளம் மேம்படுத்தும் பணியை அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை



ஊத்துக்கோட்டை, மே, 20 –
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சி, எர்ணாகுப்பம் கிராமத்தில், சின்ன ரெட்டி குளம் ஒன்று உள்ளது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2 கீழ் ரூ.15 லட்சத்து 40 ஆயிரம் நிதியில் இக்குளத்தை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இக்குளத்தைதூர்வாரி படிக்கட்டுகள் அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என இப்பகுதி மக்கள் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக கோரிக்கை விடுத்த வண்ணம் இருந்தனர். இந்நிலையில் இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஆனால் இந்த குளத்தை தூர் வாரும் பணி மேற்கொள்வதாக கூறி பல நூறு லோடு லாரி மண் இக்குளத்தில் இருந்து கடத்தப்படுவதாக பொதுமக்கள் சிலர் குற்றச்சாட்டு எழுப்பி உள்ளனர். மேலும்,46 மீட்டர் அகலம், 44 மீட்டர் நீளம், மூணே கால் மீட்டர் அகலம், உள் ஆழம் இரண்டரை மீட்டர் என இக்குளம் அமைக்க வேண்டும்.

எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் இங்கு நடைபெறும் பணியை பார்வையிட்டு கால்நடைகளான ஆடு, மாடு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக பயன்படுத்தும் வகையில் இக்குளத்தை மேம்படுத்தி தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் சத்துணவு ஊழியர்கள் கோரிக்கை மனு



அரியலூர், மே.20–
அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பில் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வரிடம் அனுப்புவதற்காக, அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அருளப்பனிடம், தமிழ்நாடு சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் அரியலூர் வட்டாரக் கிளை சார்பில், மாவட்ட செயலாளர் காந்தி தலைமையில், ஒன்றியத் தலைவர் கொளஞ்சி, பொருளாளர் சுகன்யா உள்ளிட்டோர், கொடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

ஓரங்கட்டப்படும் சத்துணவு திட்டமும், சத்துணவு ஊழியர்களும். ஒரே மையத்தில் காலை 9 மணிக்குள் காலை உணவு தயாரிக்கப்பட வேண்டும். 9. 15 மணிக்கு பிறகு, மதிய உணவு தயாரிப்பு வேலை செய்ய வேண்டும். ஒரு சத்துணவு மையத்தில், இரண்டு அறை உள்ளது. ஒரு அறையில் உணவுப்பொருட்களும், ஒரு அறையில் சமையல் செய்யும் பணியும் நடத்த வேண்டும். சமையல் பாத்திரங்கள், இருப்பு பதிவேடுகள், அதே அறையில் வைக்க வேண்டும். வாரந்தோறும் ஐந்து நாட்கள் முட்டை வரும் அவற்றையும் அதே அறையில் தான் வைத்து பாதுகாக்க வேண்டும். இரண்டு திட்டத்துக்கான பொருட்களும், காணாமல் போகும் நிலை உள்ளது. இரண்டு உணவுமே ஒரு நிர்வாகத்தின் மூலம் பள்ளி சத்துணவு மையத்தில் தயாரித்தால், ஒரு துறையின் பொறுப்பாகும். ஆனால் இரண்டு உணவுகளையும், வெவ்வேறு நபர்கள் தயாரிப்பதில், சூழ்நிலை, காலம் ஒத்து வருமா? அல்லது பொருட்களின் பாதுகாப்பு சரியாக இருக்குமா?

அரசு உத்தரவுக்கும், தற்போதைய நடைமுறைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது. பள்ளி சத்துணவு மையங்களில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. ஏற்கனவே சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை என்று இருந்ததை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை என அரசு மாற்றி உள்ளது. இந்த செயல் சத்துணவு திட்டத்தை மூடுவதற்கா? என்பதும், கேள்விக்குறியாக உள்ளது. எனவே பள்ளி சத்துணவு மையங்களில், சாவியை மற்றவர்களிடம் ஒப்படைக்க இயலாது என்பதை, தமிழக முதல்வரிடம் கனிவுடன் கூறிக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதே போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, அரியலூர் மாவட்டத்தில் உள்ள, ஜெயங்கொண்டம் மற்றும் செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமும், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பில் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

# தண்ணீர் கேன் தரம் குறித்து உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் 16 இடங்களில் அதிரடி சோதனை



சென்னை, மே, 20 –
சென்னை, திருவொற்றியூரில் உணவு பாதுகாப்பு ஆணையர் லால் வினா தலைமையில் குடிநீர் விற்பனை செய்யும் விற்பனை நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை மற்றும் குடிநீர் வழங்கல் வாரிய அதிகாரிகளுடன் 16 இடங்களில் சோதனை மேற்கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய உணவு பாதுகாப்பு துறை அதிகாரி திருவெற்றியூர் பகுதியில் சென்னை மாநகராட்சி இடங்களில் பாட்டிலில் அடைக்கப்பட்டு குடிநீர் விற்பனை செய்வதை ஆய்வு மேற்கொண்டதில் 13 குடிநீர் நிறுவனங்களில் மாதிரிகள் எடுக்கப்பட்டு கிண்டியில் உள்ள பகுப்பாய்வு கூடத்திற்கு தரம் குறித்து ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

தரம் இல்லாமல் விற்பனை செய்த 6 கம்பெனிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஒரு கடைக்கு விற்பனை தடை நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். தரமான குடிநீர் வழங்காததால் ஒரு கடை மூடப்பட்டுள்ளது. மற்ற கடைகளுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

ஆய்வின் போது 100 கேன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 70 சதவீதம் சூரிய ஒளிகள் படும் அளவிற்கு மிக மோசமான நிலையில் இருந்த 200 கேன்களை பறிமுதல் செய்து துளையிட்டு அழித்ததாக தெரிவித்தார். பொது மக்களுக்கு விற்பனை செய்யும் 20 லிட்டர் கேனில் அழியாத மையில் தயாரிப்பு தேதியும், காலாவதியான தேதியும் சீல் செய்யப்பட்டு இருக்க வேண்டும். கேன் மூடி மீது ஸ்டிக்கர் ஒட்டினால் பறிமுதல் செய்யப்பட்டும். கம்பெனி ஸ்டிக்கரில் உணவு பாதுகாப்பு துறை உரிமம் இருக்க வேண்டும். எம்ஆர்பி உள்ளிட்ட அனைத்து உணவு பாதுகாப்பு தரங்கள் உறுதி செய்து அதன் அடிப்படையில் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

குடிநீரில் பாக்டீரியா உருவாகி வருவதால் வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை என பல வைரஸ் தொடர்புடைய நோய்கள் வரக்கூடிய வாய்ப்பு உள்ளதால் அதன் தரம் குறித்து பரிசோதனை செய்வதற்காக தான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது

சென்னையில் குடிநீர் தயாரிப்பு நிறுவனங்கள் சுத்திகரிப்பு நிறுவனங்கள் இல்லாததால் ரெட்ஹில்ஸ், செங்குன்றம், மாதவரம் உள்ளிட்ட பகுதிகளில் கேன் எடுத்துவந்து இங்கே விற்பனை செய்து வருகின்றார்கள். பாட்டிலில் அடைக்கப்பட்ட குடிநீர் கண்டிப்பாக ஐ எஸ் ஐ முத்திரை இருக்க வேண்டும். உணவு பாதுகாப்பு உரிமம் பெற்று இருக்க வேண்டும். இது இரண்டையும் உறுதி செய்ய வேண்டும். உறுதி செய்யாமல் வாங்க வேண்டாம் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

# வெங்கல் காவல் நிலையத்தில் வரவேற்பாளர் அறையை ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு கணேஷ் குமார் திறந்து வைத்தார்



ஊத்துக்கோட்டை, மே, 20 –
திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை சப்-டிவிஷனை சேர்ந்த வெங்கல் காவல் நிலையத்தில் வரவேற்பாளர் அறை திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த வரவேற்பாளருக்கு ஒரு கம்ப்யூட்டர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளிப்பவர் இவரை அணுகலாம். இவர் என்ன புகார் கொடுத்தார். யார் மீது புகார் கொடுத்தார்.

எத்தனை மணிக்கு சம்பவம் நடைபெற்றது. எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார். என்பது உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பதிவேற்றம் செய்வார். மேலும் புகார்தாரரர் காவல் நிலையத்தில் எந்த அதிகாரியை அணுக வேண்டும் என்றும் கூறுவார். இதனால் புகார்தாரர் எளிதாக தனது புகாரை காவல் நிலையத்தில் கொடுத்து அதற்கு தீர்வு பெறுவதற்கு இந்த வரவேற்பாளர் வசதி செய்து கொடுப்பார்.

இந்த வரவேற்பாளர் அறையை திறந்து வைக்கும் நிகழ்ச்சிக்கு வெங்கல் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு கணேஷ் குமார் கலந்துகொண்டு வரவேற்பாளர் அறையை திறந்து வைத்து காவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். முன்னதாக அனைவரையும் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வினோத்குமார் வரவேற்றார். முடிவில் சப்-இன்ஸ்பெக்டர் சீனிவாசன் நன்றி கூறினார்.



காரைக்கால் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி முடிவினை மாவட்ட ஆட்சியர் நேற்று காலை வெளியிட்டார். இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன், மேல்நிலைக் கல்வித் துணை இயக்குனர் ராஜேஸ்வரி, முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# எடப்பாடி பழனிச்சாமி பிறந்த நாளையொட்டி முருகன் கோவிலில் சீர்காழியை சேர்ந்த அதிமுகவினர் வழிபாடு



சென்னை, மே, 20 –
அதிமுக இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் கடந்த 12 ஆம் தேதி நிறைவடைந்தது. இதனையொட்டி தொண்டர்கள் தொடர்ந்து மர கன்றுகள் நட்டும், புத்தகங்கள் வழங்கியும், ரத்த தானம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை செய்து கொண்டாடி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக சென்னை அண்ணா நகரில் உள்ள பாலமுருகன் ஆலயத்தில் மயிலாடுதுறை மாவட்ட முன்னாள் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் நாடி. செல்வ முத்துக்குமரன் தலைமையில் அதிமுகவினர் சிறப்பு யாகமும், வழிபாடும் நடத்தினர். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

அமாவாசை தினம், கார்த்திகை நட்சத்திரம், வெள்ளிக்கிழமையில் முருகனுக்கு உகந்த நாளில் எடப்பாடி பழனிச்சாமி தொடர்ந்து பொதுச்செயலாளராக நீடிக்க வேண்டும் என்றும், நீண்ட ஆயுளோடு இருக்க வேண்டும் என்றும், அமைப்பு செயலாளர் ஓ.எஸ்.மணியன், மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் பவுன்ராஜ், சீர்காழி மேற்கு ஒன்றிய செயலாளர் ஆதமங்கலம் ரவிச்சந்திரன் ஆகியோரின் வழிகாட்டுதலோடு மகா யாகம் நடைபெற்றதாக அதிமுகவினர் தெரிவித்தனர்.

# சீர்காழி சட்டநாதர் கோயில் கும்பாபிஷேகம்: பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் ஆய்வு



சீர்காழி, மே, 20 –
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு உட்பட்ட சட்டநாதர் சுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் திருநிலை நாயகி அம்மன் உடனாகிய பிரம்மபுரீஸ்வரர் சுவாமி அருள் பாலிக்கிறார்.

பிரசித்தி பெற்ற இக்கோயில் கும்பாபிஷேகம் 32 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் 24 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்காக எட்டு கால யாக சாலை பூஜைகள் 20 ஆம் தேதி தொடங்கி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கும்பாபிஷேகத்தில் பங்கேற்க கோயில் நிர்வாகம் சார்பில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், அமைச்சர்கள் என பல்வேறு முக்கிய பிரமுகர்களுக்கு அழைப்பிதழ் நேரில் வழங்கப்பப்பட்டுள்ளது.

இதனிடையே கோயில் கும்பாபிஷேகத்தில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வரக்கூடும் என்பதாலும், முக்கிய பிரமுகர்கள் வர இருப்பதாலும் பாதுகாப்பு ஏற்பாடுகள், பக்தர்களுக்கு தேவையான வசதிகள் உள்ளிட்டவைகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது குறித்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா மற்றும் அரசு துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

கோயிலில் உள்ள பிரகாரங்கள், சாமி சன்னதிகள், மேல் தளங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளுக்கும் நேரடியாக சென்று பக்தர்கள் அனுமதி எண்ணிக்கை குறித்தும், முக்கிய பிரமுகர் தங்க உள்ள இடங்கள் குறித்தும் ஆய்வு செய்தனர். தொடர்ந்து கோயில் வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி தலைமையில் அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

# பளுதூக்கும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பாராட்டு



காரைக்கால், மே, 20 –
புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் இருந்து தமிழ்நாடு தென்காசியில் பளுதூக்குவோர் சப்ஜூனியர், சீனியர் பிரிவில் மே மாதம் 12 முதல் 17 ஆம் தேதி வரை நடைபெற்றது. இப்போட்டியில் புதுவை பளுதூக்கும் சங்கத்தின் சார்பாக பலர் கலந்து கொண்டு பதக்கங்களை வென்றனர். இப்போட்டியில் காரைக்கால் மாவட்டம் நெடுங்காட்டை சேர்ந்த அந்தோணிராஜ் மற்றும் மச்சக்கிளி இவர்களின் மகளாகிய கலைச்செல்வி என்ற மாணவி 69 கிலோ எடைப் பிரிவில் புதுவை மாநில அளவில் வெண்கலப் பதக்கத்தை பெற்று புதுவை மாநிலத்திற்கும், காரைக்கால் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர்களைகண்டறிந்து திறம்பட பயிற்சி அளித்த பயிற்சியாளர் கே.கணேஷ் என்பவரையும், மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்ற மாணவியையும் நேரில் அழைத்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பாராட்டினார். இம்மாணவி அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில் முதலாம் ஆண்டு வரலாற்று துறையில் படித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.







▶ புதுக்கோட்டை டவுன் ராஜகோபாலபுரம் லண்டன் லுக் நர்சரி பள்ளியில் இக்கல்வியாண்டில் சேரும் மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. புதுகை வரலாறு நிறுவனர் & ஆசிரியர் சு.சிவசக்திவேல் கலந்து கொண்டு மழலை செல்வங்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். அருகில் பள்ளியின் நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, முதல்வர் சரவணசெல்வி உள்ளிட்டோர் உள்ளனர்.

# புதுக்கோட்டை மௌண்ட்சீயோன் மெட்ரிக் பள்ளி மாணவி மாநில அளவில் மூன்றாம் இடம்பிடித்து இமாலயசாதனை

புதுக்கோட்டை, மே.20-

2022-23-2023 ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வில், தமிழ்நாட்டில் மூன்றாவது இடமும், மாவட்ட அளவில் முதலிடமும் பெற்று மௌண்ட் சீயோன் பள்ளி மாணவி சு.கீர்த்திகா இமாலய சாதனை புரிந்துள்ளார்.




பள்ளி அளவில் மாணவி சு.கீர்த்திகா 496 மதிப்பெண் பெற்று முதலிடமும், மாணவி பாலசுந்தரி 492 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடமும், மாணவி ஸ்வேதா 485 மதிப்பெண் பெற்று மூன்றாம் இடம் பிடித்துள்ளனர். மேலும் ஆங்கிலம், கணக்கு மற்றும் அறிவியல் பாடங்களில் 100/100 மதிப்பெண் பெற்றுள்ளனர். 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் 18 மாணவர்கள் பெற்று சாதனைப் படைத்துள்ளனர்.

சாதனைப் புரிந்த மாணவர்களை ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் வாழ்த்தி, தங்கள் பாராட்டைத் தெரிவித்தனர், சாதனைப் புரிந்த மாணவர்களை பள்ளி நிர்வாக முதல்வர் கிருபா ஜெபராஜ் மற்றும் உயர்நிலைப்பள்ளி ஒருங்கிணைப்பாளர் ரஞ்சித் சாமுவேல்பாராட்டு தெரிவித்தனர்.

# புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் சாலையோர மாலைநேர பூங்கா நேற்று திறக்கப்பட்டது

புதுக்கோட்டை , மே.20-

புதுக்கோட்டை புதிய பேருந்துநிலையம் அருகில், (பெரியார் நகர் செல்லும்) டி.டி.பிளான்சாலையில், சாலையோர மாலைநேர பூங்காவினை, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா நேற்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தலைமையில் நடைபெற்றது.





புதுக்கோட்டை புதிய பேருந்துநிலையம் அருகில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திட்ட நிதியிலிருந்து ரூ.65 இலட்சம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சிறப்பு நிதி ரூ.24 இலட்சம் என மொத்தம் ரூ.89 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா திறக்கப்பட்டது. இந்த பூங்காவில் சிறுவர், சிறுமிகள் விளையாடுவதற்காக விளையாட்டு உபகரணங்களும், பொதுமக்கள் மாலை நேரங்களில் அமர்ந்து இளைப்பாருவதற்காகவும், பூச்செடிகளுடன் கூடிய அமருமிடங்களும், எழிலார்ந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இயற்கை எழில்சார்ந்த கண்கவர் ஓவியங்களும், சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகராட்சி ஆணையாளர் (பொ) எஸ்.டி.பாலாஜி, வட்டாட்சியர் விஜயலெட்சுமி, திமுக நகரச்செயலாளர் செந்தில், நகர்மன்ற உறுப்பினர்கள் செந்தாமரை பாலு, காதர்கனி, ஜெயலட்சுமி, குமாரவேலு,க.லதா,பழனிவேல், சுகாதார ஆய்வாளர் மகாமுனி, வருவாய் ஆய்வாளர் விஜயஸ்ரீ, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




▶ புதுக்கோட்டையில் அறந்தாங்கி கல்வி மாவட்டம் நாகுடி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்ற 10-ம் வகுப்பு மாணவி வெட்டிவயல் ஊராட்சி மன்றத் தலைவர் லெட்சுமி சுப்பிரமணியன் மகள் கனிகா 488/500 மதிப்பெண் பெற்று பள்ளி அளவில் முதலிடத்தை பெற்றும் அறந்தாங்கி கல்வி மாவட்ட அளவில் இரண்டாமிடம் பெற்றுள்ளார். இந்நிலையில் நாகுடி அரசு பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைகுழு, பெற்றோர்ஆசிரியர் கழகத்தினர் மாணவிக்கு வாழ்த்து தெரிவித்தனர், பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் நாகுடி அரசு மேல்நிலைப்பள்ளி 91%சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது

# திருச்சியில் இருந்து கும்பகோணம் வழியாக அகமதாபாத் செல்லும் சிறப்பு ரயிலில் கூடுதலாக 3 பெட்டிகள் இணைப்பு

திருச்சி , மே.20-

திருச்சியிலிருந்து கும்பகோணம் வழியாக ஞாயிற்றுக்கிழமை அகமதாபாத் செல்லும் சிறப்பு ரயிலில் கூடுதலாக 3 பெட்டிகள் இணைக்கப்படும் என தென்னக ரயில்வே அறிவித்துள்ளது.

அகமதாபாத் -திருச்சி இடையே,கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபர் முதல் பரோடா, சூரத், வாசை -கல்யாண் (மும்பை), புனே, மந்த்ராலயம் ரோடு, ரேணிகுண்டா (திருப்பதி), சென்னை, கும்பகோணம், தஞ்சாவூர் வழியாகச் சிறப்பு ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு ரயிலில் மொத்த இருக்கைகளை விட 2 மடங்கிற்கும் மேலாகப் பயணிகள் பயன்பாடு இருந்து வருகிறது.

மேலும், தற்போது கோடை விடுமுறை என்பதால் அகமதாபாத் ரயிலில் முன்பதிவு செய்து அதிகமான பயணிகள் காத்திருப்போர் எண்ணிக்கையில் உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு



வரும் ஞாயிற்றுக் கிழமை (21-ம் தேதி) திருச்சியில் இருந்து புறப்படும் வண்டி எண்- 09420 திருச்சி-அகமதாபாத் சிறப்புக் கட்டண சிறப்பு ரயிலில் கூடுதலாக ஒரு மூன்றடுக்கு குளிர்சாதனப் பெட்டியும், 2 சாதாரண படுக்கை வசதி பெட்டிகளும் இணைக்கப்படுவதாக தென்னக ரயில்வே தெரிவித்துள்ளது.

இதனால் குளிர்சாதன பெட்டியில் 64 பயணிகளும், சாதாரண படுக்கை வசதி பெட்டியில் 144 பயணிகளும் கூடுதலாகப் பயணிக்க முடியும். பயணிகள் நலன் கருதி இந்த சிறப்பு ரயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்க திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகத்தின் அறிவிப்பை தஞ்சாவூர் மாவட்ட ரயில்வே உபயோகிப்பாளர்கள் சங்கம் சார்பில் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தஞ்சாவூர் மாவட்ட ரயில்வே உபயோகிப்பாளர்கள் சங்கச் செயலாளர் ஏ.கிரி கூறும்போது, ”கடந்த 8 மாதங்களாக பிரதான லயன் பகுதி பயணிகளின் சிறப்பான பயன்பாட்டைப் பெற்றுள்ள திருச்சி-அகமதாபாத் சிறப்பு ரயில் இயக்கம், தற்போது ஒவ்வொரு மாதமும் நீடிக்கப்பட்டு வருகிறது.

இதனால் பயணிகள் தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிடுவதில் சிரமம் ஏற்படுகிறது. இருப்பினும் இந்த ரயிலில் பயணிகள் பயன்பாடு அதிகமாகவே உள்ளது. எனவே இந்த ரயிலை வாரம் 2 முறை நிரந்தர ரயிலாக இயக்க வேண்டும். இதனால் தொலை தூரப் பயணிகள் 120 நாட்களுக்கு முன்னரே முன்பதிவு மேற்கொண்டு தங்கள் பயணத்தைத் திட்டமிடமுடியும்" எனத் தெரிவித்தார்.

# ஆலங்குடி அருகே பாப்பான்விடுதி ஜல்லிக்கட்டு போட்டி 28 பேர் காயம்



ஆலங்குடி, மே.20-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே பாப்பான்விடுதி ஸ்ரீமுத்து முனிஸ்வரர் ஆலய திருவிழாவை முன்னிட்டு 55 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது .ஜல்லிக்கட்டு போட்டியில் 600காளைகளும் 300 மாடுபிடி வீரர்களும் கலந்து கொண்டனர். ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு பாதுகாப்பு உறுதிமொழியை ஆலங்குடி வட்டாட்சியர் விஸ்வநாதன் ஏற்றி வைத்தார்,புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் ஜல்லிக்கட்டு போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஜல்லிக்கட்டு காளைகள் வாடி வாசலில் இருந்து சீறிப்பாய்ந்து வந்தன, அதனை அடக்க வீரங்கள் முயன்றனர், ஜல்லிக்கட்டு போட்டியில் சீறிப்பாய்ந்த காளைகளுக்கும், காளையை அடக்கியவீரர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன, ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகள் முட்டியதில் 28 பேர் காயம் அடைந்தனர், காயமடைந்தவர்களுக்கு அங்கு அமைக்கப்பட்ட மருத்துவ முகாமில் சிகிச்சை அளிக்கப்பட்டது, ஜல்லிக்கட்டு போட்டி பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆலங்குடி காவல்துறை கண்காணிப்பாளர் தீபக் ரஜினி தலைமையில் காவல்துறையினர் செய்திருந்தனர்.

# கந்தர்வகோட்டை அருள்மாரி மெட்ரிக் பள்ளியில் மாணவ, மாணவிகள் 100% தேர்ச்சி பெற்று சாதனை

கந்தர்வகோட்டை, மே.20-

2022- 2023 ஆம்கல்விஆண்டிற்கானபத்தாம்வகுப்புஅரசுத்தேர்வில், கந்தர்வகோட்டை அருள்மாரி மெட்ரிக் பள்ளியில் பயின்ற மாணவி சரிகா 477 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதல் இடத்தையும், சுவாதி என்ற மாணவி 473 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தையும், வீரலட்சுமி 463 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்று சாதனைபுரிந்துள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை அருள்மாரி பள்ளியின் தாளாளர்கள், ஆசிரியர் பெருமக்கள் பெற்றோர்கள் வெகுவாக பாராட்டினர் , பள்ளியில் பயின்ற அனைத்து மாணவர்களும் 100% தேர்ச்சி பெற்று கந்தர்வகோட்டை பகுதிக்கு சிறப்பு சேர்த்துள்ளனர்.

# 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை

புதுக்கோட்டை,மே.20-

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு எழுதிய மாணவர்கள் வழக்கம்போல் நூறு சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளார்கள். மாணவர்கள் 30, மாணவிகள் 46 ,மொத்தம் தேர்வு எழுதிய 76 பேரும் வெற்றி பெற்றுள்ளார்கள். திவ்யஸ்ரீ, பார்கவி, முகமது ரிஸ்வான், ஸ்ரீவர்ஷினி, கயல்விழி, கோபிகா ஸ்ரீ ஆகியோர் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.



திவ்ய ஸ்ரீ 487/500 ,முகமது ரிஸ்வான் 471/500, பார்கவி 479/500, ஸ்ரீவர்ஷினி 466/500, கயல்விழி 463/500 ,கோபிகா ஸ்ரீ 460/500 வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளியின் முதல்வர் தங்கம் மூர்த்தி, பள்ளியின் ஆலோசகர் அஞ்சலிதேவி தங்கம்மூர்த்தி, நிர்வாக இயக்குநர் நிவேதிதா மூர்த்தி, பள்ளியின் சிஇஓ காவியாமூர்த்தி பள்ளியின் துணைமுதல்வர் குமாரவேல், ஒருங்கிணைப்பாளர் அபிராம சுந்தரி, ஆசிரியர்கள் கமல்ராஜ், ராஜாமணி, ஜெயசுதா, பவானி, சித்திரைச்செல்வி, சத்தியராஜ், சின்னையா சரவண பவா மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, வரலெட்சுமி, கோமதி மேலாளர் ராஜா, காசாவயல் கண்ணன், உதயகுமார், நீலகண்டன், சரசு ஆகியோர் பாராட்டி இனிப்புகள் வழங்கினர்.

# தென்காசியில் ரசாயன ஊசி செலுத்தி பழுக்க வைக்கப்பட்ட தர்பூசணி பழங்கள் அழிப்பு



தென்காசி, மே.20-

தென்காசி மாவட்டம், குத்துக்கல் வலசை பகுதியில் உள்ள தர்பூசணி பழங்கள் விற்பனை செய்யும் கடையில் இயற்கைக்கு மாறாக ரசாயன ஊசி செலுத்தி செயற்கையாக பழுக்க வைக்கப்பட்ட தர்பூசணி பழங்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் இதை பொதுமக்கள் உண்பதால் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படுவதாகவும் இணையம் வழியாக ஒரு நபர் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிக்கு புகார் கொடுத்துள்ளார்.புகாரின் பேரில், தென்காசி ஊராட்சி ஒன்றிய உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி நாகசுப்பிரமணியன் தென்காசி-மதுரை நெடுஞ்சாலையில் குத்துக்கல் வலசை பகுதியில் செயல்பட்டு வரும் தர்பூசணி பழங்கள் விற்பனை செய்யும் கடையில் ஆய்வு நடத்தினார்.

இந்த ஆய்வின் போது அந்த கடையில் விற்பனை செய்யப்பட்டு வந்த தர்பூசணி பழங்கள் அனைத்தும் இயற்கைக்கு மாறாக செயற்கையான முறையில் ரசாயன ஊசி மூலம் பழுக்க வைக்கப் பட்டது தெரிய வந்தது, இதனை தொடர்ந்து, அந்த கடையில் இருந்த சுமார் 100 கிலோ தர்பூசணி பழங்களை பறிமுதல் செய்து குப்பையில் கொட்டி அளித்தார், மேலும் தற்போது கோடை காலம் என்பதால் ஏராளமான பொதுமக்கள் தண்ணீர் சத்து மிகுந்த உணவுப் பொருட்களை உண்பது வழக்கம். அப்படி தண்ணீர் சத்து மிகுந்த உணவுப் பொருட்களை தேடி செல்லும் பொது மக்கள் முதலில் வாங்குவது தர்பூசணி பழங்கள்தன், அப்படி ஏராளமான பொதுமக்கள் விரும்பி உண்ணும் இந்த தர்பூசணி பழங்களிலே ரசாயன ஊசி மூலம் செலுத்தி பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுவது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.மேலும், இது போன்ற இயற்கைக்கு மாறாக செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள் மற்றும் அமிலம் செலுத்தி பழுக்க வைக்கப்பட்ட பழங்களை விற்பனை செய்யும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# சுந்தரபாண்டிய புரத்தில் நகர காங்கிரஸ் அலுவலகம் திறப்பு விழா: பழனி நாடார் எம்எல்ஏ திறந்து வைத்தார்

தென்காசி, மே. 20-

தென்காசி மாவட்டம் சுந்தரபாண்டியபுரத்தில் நகர காங்கிரஸ் கட்சியின் அலுவலக திறப்பு விழா மற்றும் காங்கிரஸ் கட்சியின் கொடியேற்று விழா நடைபெற்றது. முன்னதாக பேருந்து நிலையம் அருகில் உள்ள முத்துராமலிங்க தேவர் சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதன் பிறகு காங்கிரஸ் கட்சியின் புதிய அலுவலகம் அருகே உள்ள கட்சி கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி புதிய அலுவலகத்தை தலைமை வகித்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.



இந்நிகழ்ச்சிக்கு ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ஜெயராமன், காமராஜ் என்ற முத்தையா, மற்றும் பலர் முன்னிலை வகித்தனர். வட்டாரத் தலைவர் பெருமாள் வரவேற்புரை ஆற்றினார், நகர தலைவர் முப்புடாதி பாண்டியன் தொகுப்புரை வழங்கினார், மாவட்ட பொருளாளர் முரளி ராஜா, மாநில இலக்கிய அணி துணைத்தலைவர் ஆலடி சங்கரையா, மாநில காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் சங்கர குமார், மாநில செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர் சட்டநாதன், சுரண்டை நகர் மன்றத் தலைவர் வள்ளி முருகன், மாவட்ட இலக்கிய அணி தலைவர் பால் துரை, மாவட்ட துணைத் தலைவர்கள் சிவராமகிருஷ்ணன், முத்துவேல், பால் என்ற சண்முகவேல், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதயகிருஷ்ணன், சுரண்டை நகரத் தலைவர் எஸ்.கே.டி.ஜெயபால், மாவட்ட மகளிர் காங்கிரஸ் தலைவர் சேர்மக்கனி, வட்டார தலைவர்கள் கிளங்காடு மணி, முருகையா, மாவட்ட செயலாளர் தேவேந்திரன், பிரபாகர் ,கதிரவன், சிங்கக்குட்டி என்ற குமரேசன், வர்த்தக காங்கிரஸ் சுப்பிரமணியன், தாயார் தோப்பு ராமர், சாம்பவர் வடகரை பழனிக்குமார், அந்தோணி, ராஜசேகர், அரவிந்த், சேகர், முத்து, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர், முடிவில் நகர காங்கிரஸ் துணைத் தலைவர் தட்டான் குளம் செல்வராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஆவுடையார்கோவிலில் நீதிமன்றம் அமைப்பதற்கான இடத்தினை நீதிபதிகள் ஆய்வு

ஆவுடையார்கோவில், மே.20-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் புதிதாக நீதிமன்றம் அமைப்பதற்காக மக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் நேற்று புதுக்கோட்டை மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதிஜெயக்குமாரி ஜெமிரெத்னா மற்றும் சிறப்பு நீதிமன்றம் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் என்டிபிஎஸ் நீதிமன்ற கூடுதல் மாவட்ட நீதிபதி பாபுலால் ஆகியோர் முதலில் ஆவுடையார்கோவில் பழைய வட்டாட்சியர் அலுவலகத்தையும் பிறகு ஆவுடையார்கோவில் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் அருகில் உள்ள ஓர் கட்டிடத்தையும், பிறகு ஆவுடையார் கோவில் கால்நடை மருத்துவமனை அருகில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் நீதிமன்றம் கட்டுவதற்காக வகை மாற்றம் செய்யப்பட்ட இடத்தினையும் நீதிபதிகள் பார்வையிட்டு சென்றனர்.




அவர்களுடன் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் மார்ட்டின் லூதர் கிங் மற்றும் காவல் துறை ஆய்வாளர்சாந்தகுமாரி உட்பட துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# 2000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதாக RBI அறிவிப்பு

# புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை மே28-ல் பிரதமர் திறந்து வைக்கிறார்





# பொறியியல் கலந்தாய்வு ஜூலை 2ம் தேதி தொடங்கும் அமைச்சர் தகவல்


சென்னை / புதுக்கோட்டை | 20.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**அயோத்தி தாசர்** , தமிழகத் தமிழறிஞர் (பி.1845) (இ.1914)



**சந்திரசேகர சரசுவதி** , காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது தலைவர் (பி.1894) (இ.1994)



**சாலா நாத் கனால்** , நேபாள அரசியல்வாதி, பிரதமர் (பி.1950)



## இன்றைய நினைவு நாள்

**மல்கர் ராவ் ஓல்கர்** , மராட்டியப் பேரரசர் (பி.1693) (இ.1766)



**த. பிரகாசம்**, சென்னை மாகாண முதல்வர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1872) (இ.1957)




**பி. சா. சுப்பிரமணிய சாத்திரி** , தமிழக சமக்கிருத, தமிழறிஞர், உரையாசிரியர் (பி.1890) (இ.1978)



## உலக தேனீ தினம்